# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL,PATTUKKOTTAI

| | |
|---|---|
| **STC. No.** | **63/2025** |
| **பெயர்:** | **சாமியப்பன்** |
| **தந்தை பெயர் :** | **சந்திரகாசன்** |
| **வயது:** | **60/2025** |
| **ஊர்:** | **கரூப்பூர்** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | **அரசு காண்ட்ராக்டர்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of **27th day of January 2026**

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11:41 AM**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**
**எதிரி ஆஜர்.**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திரு. எஸ். குமார், (பலகை எழுத்தர் நிலை -III ) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

1. எனது நிரூபண வாக்குமூலத்தில் எதிரியானவர் பொக்கன்விடுதி கிராமத்தில் அன்பு மெடிக்கல்ஸ் நடத்தி வருகிறார் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால், சரிதான்.

2. எதிரியானவர் எனக்கு புனல்வாசல் அந்தோனிசாமி மூலம்தான் எனக்கு அறிமுகம் ஆகி நன்கு பழக்கம் ஆகினார் என்று சொன்னால், சரிதான்.

3. எனது நிரூபண வாக்குமூலத்தில் எதிரியானவர் 06.01.2024 அன்று அவருடைய மெடிக்கல் கடையை விரிவு படுத்துவதற்காக ரூ.10,00,000/- கடனாக கேட்டார் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால், சரிதான்.

4. மேற்படி எனது நிரூபண வாக்குமூலத்தில் எதிரியானவர் என்னிடம் ஏற்கனவே பணம் வாங்கிவிட்டு அதை சரியாக திருப்பி கொடுத்துள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால்,அந்தோனிசாமி மூலம் நான் பணத்தை எதிரியிடம் இருந்து கொடுத்த பணத்தை வாங்கினேன்.

5.இவ்வழக்கு காசோலையான ம.சா.ஆ. 1 ஆன காசோலையானது பழைய கடனான ரூ.5,00,000/- த்திற்கு எதிரியானவர் பூர்த்தி செய்யப்படாத 2021 ல் செக்யூரிட்டிக்காக கொடுத்த காசோலை என்றும், அந்த ரூ.5,00,000/- கடனை அவர் அடைத்துவிட்டார் என்றும், அப்போது செக்யூரிட்டிக்காக கொடுத்த காசோலையை பூர்த்தி செய்து நான் தற்போது இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

6. நான் ரூ.10,00,000/-த்தை எதிரிக்கு என்னுடைய தென்னந்தோப்பு, காண்ட்ராக்ட் ஆகிய வருமாணத்தில் வந்த பணத்தை தான் நான் எதரிக்கு கொடுத்தேன் என்று சொன்னால், சரிதான். நான் கொடுத்த பணத்திற்கு கை லெட்டர் மற்றும் Pro-note எதுவும் பெறவில்லை என்று சொன்னால், சரிதான்.

7. நான் எதிரியிடம் ரூ.10,00,000/-த்தை அந்தோனிசாமி மூலம் கொடுத்தேன், அப்போது திருச்சிற்றம்பளத்தை சேர்ந்த பாலா என்பவரும், பொக்கன்விடுதியை சேர்ந்த ராஜா என்பவர்கள் முன்னிலையில் தான் பணத்தை கொடுத்தேன். அவர்களின் தந்தை பெயர் எனக்கு தெரியாது.

8. நான் மேற்கூறிய இரு நபர்களின் முன்னிலையில்தான் பணத்தை கொடுத்தேன் என்ற விபரத்தினை எனது வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு, நிரூபணவாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்று சொன்னால், அந்தோனிசாமி மூலம் கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேன்.

9. எனது புகார் மனுவில் அந்தோனிசாமியை சாட்சியாக சேர்க்கவில்லை என்று சொன்னால், சரியல்ல.

10. எனக்கு தென்னந்தோப்பு, தேங்காய், காண்ட்ராக்ட் ஆகியவைகளில் இருந்து வந்த வருமானத்தை எனது வரவு செலவு பதிவேட்டில் எழுதியுள்ளேனா என்றால், எழுதியுள்ளேன்.

11.நான் எதிரிக்கு ரூ.10,00,000/-த்தை கடனாக கொடுத்ததை எனது வரவு செலவு பதிவேட்டில் எழுதியுள்ளேனா என்றால், எழுதியுள்ளேன்.

12. நான் மேற்படி கூறியுள்ள வரவு செலவு கணக்கினை நான் பராமரித்து வருகிறேன் என்ற விபரத்தினை எனது வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு, நிரூபணவாக்குமூலத்தில் கூறவில்லை என்று சொன்னால், சரிதான்.

13. நான் எதிரியிடம் எந்த பணமும் கொடுக்கவில்லை என்பதாலும், எந்த வரவு செலவு கணக்கு புத்தகம் பராமரித்துவரவில்லை என்பதாலும்தான் நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு, நிரூபணவாக்குமூலத்தில் கூறவில்லை என்று சொன்னால், சரியல்ல.

14. வங்கியில் இருந்து Signature differs என்று இருமுறை வந்தததை ஒட்டி நான் எதிரியிடம் தொலைபேசியின் மூலம் விளக்கத்தை கேட்டறிந்தேனா என்றால், இல்லை, அந்தோனிசாமியிடம் தான் கேட்டறிந்தேன். மேற்படி விபரத்தினை நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு, நிரூபணவாக்குமூலத்தில் கூறவில்லை என்று சொன்னால், சரிதான். நான் எதிரியிடம் தொலைபேசி மூலம் இதைப்பற்றி பேசவில்லை, அந்தோனிசாமியிடம் தான் கேட்க சொன்னேன்.

15. எதிரியானவர் ரூ.5,00,000/- த்திற்காக பூர்த்தி செய்யப்படாத செக்யூரிட்டிக்காக கொடுத்த காசோலையை, எதிரியானவர் அந்த பணத்தை என்னிடம் திருப்பி கொடுத்தபின், நான் அந்த காசோலையை கொடுக்காமல் மன வருத்தம் ஏற்பட்டு விரோதத்தினால் செக்யூரிட்டிக்காக கொடுத்த காசோலையை பூர்த்தி செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

16. Signature differs என்று வந்தபின் நான் எதிரியை அழைத்துக்கொண்டு வங்கியில் இந்த பிழையை சரி செய்ய ஏதேனும் முயற்சி எடுத்தேனா என்றால், அந்தோனிசாமி மூலம் இந்த முயற்சியை எடுத்தேன், அதற்கு எதிரியானவர் ஒத்துவரவில்லை. மேற்கூறிய விபரத்தினை நான் நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு, நிரூபணவாக்குமூலத்தில் கூறவில்லை என்று சொன்னால், சரிதான்.

17. எதிரியானவருக்கு ரூ.10,00,000/- கடன் கொடுப்பதற்கு முன்பு பொக்கன்விடுதி கிராமத்திலோ அல்லது திருச்சிற்றம்பளத்திலோ எதிரிக்கு அன்பு மெடிக்கல்ஸ் என்ற கடை இருந்ததா என்றால், எனக்கு தெரியாது, அந்தோனிசாமிக்கு தான் தெரியும்.

18. இன்றுவரை எனக்கு எதிரியின் Handwritting, Signature பரிட்சயம் இல்லை என்று சொன்னால், சரிதான்.

19. எதிரியானவருக்கு நான் ரூ.10,00,000/-த்தை அந்தோனிசாமி மூலம் கொடுக்கவில்லை என்றும், அதற்கு எதிரி எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம் 12:19 PM**

**(எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி முடிக்கப்பட்டது)**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு.மா.விசால் ஆனந்த்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.